(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(5).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 மார்ச் 10 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2023 மார்ச் 21, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(3) ஆம் உறுப்புரையின் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 24 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 29 ஆம் திகதிய 2308/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(3) ஆம் உறுப்புரையின் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 7(3), 8, 10, 11 மற்றும் 12 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 15 ஆம் திகதிய 2310/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரியை திருத்துவது தொடர்பில், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 14 ஆம் திகதிய 2306/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2023.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/75 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6(3)(அ) மற்றும் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 117(2) மற்றும் 117(3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 02 ஆம் திகதிய 2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2020 டிசம்பர் 30 ஆம் திகதிய 2208/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக

*

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 சனவரி 05 ஆம் திகதிய 2313/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய அருங்கலைகள் பேரவையின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2022.11.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 202 0.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அருங்கலைகள் பேரவையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2017/2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.01.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்டின் 2017/2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2018/2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.01.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்டின் 2018/2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2023 மார்ச் 22, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2023 மார்ச் 23, வியாழக்கிழமை)**

1296/2023

கௌரவ அலி சப்ரி ரஹீம்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 01-802666 எனும் ஓய்வூதிய இலக்கத்தைக் கொண்ட திரு. எம். நயீமுல்லாஹ் அவர்களுக்கு 2021.12.31 ஆம் திகதியுடன்கூடிய திருத்தப்பட்ட ஓய்வூதிய வழங்கல் பத்திரத்திற்கமைவாக கிடைக்கப்பெற வேண்டிய மாதாந்த ஓய்வூதியமானது 31,833.33 ரூபாவாகும் என்பதை அறிவாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அவருக்கு மேற்படி ஓய்வூதியம் இறுதியாகச் செலுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அவ்வாறு செலுத்தப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட වි.වැ.කි.36/202 ஆம் இலக்கமுடைய 2022.10.30 ஆம் திகதிய கடிதத்தின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஓய்வூதியத்தை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) நிலுவைச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியத்தை திரு.எம்.நயீமுல்லாஹ் அவர்களுக்கு வழங்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 ஏப்ரல் 04, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சியிலிருந்தபோது இலங்கை மத்திய வங்கியில் பிணைமுறி மோசடி இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியானது எந்த அமைச்சின் கீழ் இருந்தது என்பதையும்;

(ii) மேற்படி சந்தர்ப்பத்தில் குறித்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரின் பெயர் மற்றும் அமைச்சுச் செயலாளரின் பெயர் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

382/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நகரங்களை அழகுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்போது கண்டி நகர வீதிகளின் இருமருங்கிலும் சூழலியல் ரீதியில் பெறுமதியான மரங்கள் நாட்டப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தின் பிரதான நகரங்களில் அமைந்துள்ள வீதிகளின் இருமருங்கிலும் உள்ள பழைய மரங்களுக்குப் பதிலாக சூழலியல் ரீதியில் பெறுமதி வாய்ந்த மரங்களை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கண்டி மாவட்டத்தில் பொருத்தமான நகரங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அந்நகரங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி நகரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பொது இடங்களிலும் நிதமும் யாசகர்கள் நடமாடுவதால் நகரின் எழிலுக்கும் தூய்மைக்கும் பாதகமான தாக்கம் ஏற்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி யாசகர்களை வேறு பொருத்தமான இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

416/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைப் பொலிஸ் வசமுள்ள உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் மோப்ப நாய்களின் வகைகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு வகைக்கும் ஏற்ப உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ பொலிஸ் மோப்ப நாய் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் வரை பொலிஸ் உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் படி தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

431/2023

கௌரவ புத்திக பத்திறண,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராசிரியர், டாக்டர், கலா நிதி, வித்யா கீர்த்தி, வித்யா ஜோதி, தேச பந்து, தேச கீர்த்தி, தேசமான்ய, விஷ்வ கீர்த்தி மற்றும் தேச சக்தி போன்ற ஒவ்வொரு கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/ பதவிகளை அளிப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ள அரச நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கௌரவ நாமம்/கௌரவ பட்டம்/ பதவி வழங்கப்படும் போது பரிசீலிக்கப்படும் கல்வி மற்றும் இதர தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/ பதவிகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இதர கௌரவ நாமங்கள்/ கௌரவ பட்டங்கள்/பதவிகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவற்றை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகளை வழங்குகின்ற இலங்கையின் தனியார் நிறுவனங்கள்/அமைப்புகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனம்/அமைப்பினால் வழங்கப்படுகின்ற கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள்/அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக அரச செயன்முறையொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி செயன்முறை யாதென்பதையும்;

(v) கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகளை வழங்கிய பின்னர் குறித்த ஆட்கள் தொடர்பாக பின் ஆய்வு மேற்கொள்ளும் செயன்முறையொன்று உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அச் செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

687/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வாழும் மக்களுக்கு 2018 ஆம் ஆண்டு 44 வீடுகள் கையளிக்கப்பட்டன என்பதையும்;

(ii) ஆயினும், இதுவரை அவ்வீடுகளின் நிர்மாணப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வீடுகளின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1798/2023

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் சியம்பலாண்டுவ, முத்துகண்டிய நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணித்ததன் விளைவாக அப்பிரதேசத்தில் காணப்பட்ட பண்டைய கிராமங்கள் சிலவற்றில் வாழ்ந்து வந்த மக்கள் தமது வாழ்விடங்களை இழந்தனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி மக்களுக்கு மாற்றுக் காணிகள் அல்லது நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மக்களுக்கு மத்தியில் எவ்வித நட்டஈட்டுத் தொகையும் கிடைக்காத சில ஆட்கள் உள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1807/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட M-9 புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி புகையிரத என்ஜின்கள் இறக்குமதி செய்யப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) அவை எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) இதற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிபிடப்பட்டுள்ள புகையிரத என்ஜின்களில் இன்றளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் தரித்து வைக்கப்பட்டுள்ள புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) தேவைக்கேற்றுவாறு மாத்திரம் புகையிரத என்ஜின்கள் மற்றும் புகையிரதப் பெட்டிகளை இறக்குமதி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) தற்போது தரித்து வைக்கப்பட்டுள்ள புகையிரத என்ஜின்கள் மற்றும் புகையிரதப் பெட்டிகளிலிருந்து பயனைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2527/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொல்பொருளியல் திணைக்களத்தினால் அண்மைக் காலத்திலிருந்து கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற காணி சுவீகரிப்புகள் தொடர்பாக அறிவீர்களா என்பதையும்;

(ii) அதிகளவில் சிறுபான்மை மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற பிரதேசங்களில் மாத்திரம் மேற்படி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமைக்கான நோக்கம் யாது என்பதையும்;

(iii) தொல்பொருளியல் திணைக்களத்தினால் சுவீகரிக்கப்படுகின்ற காணிகளை நிருவகிப்பதற்கு பௌத்த விஹாரைகளையும் பௌத்த பிக்குகளையும் இணைத்துக்கொள்வதற்கான நோக்கம் யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2572/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அவர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள உதவித்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கும், அவர்களை ஊக்குவிப்பதற்கும் விசேட கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளனவா என்பதையும்;

(v) விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதி வேறு முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2619/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் புத்தசாசன நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2023 ஏப்ரல் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

814/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்குத் தேவையான முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட, மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் முட்டைக்கான தட்டுப்பாடு நிலவுமாயின், அத்தட்டுப்பாடானது அன்றாட மற்றும் மாதாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முட்டை உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அன்றாடம் 1000 இற்கும் மேற்பட்ட, 10,000 இற்கும் மேற்பட்ட மற்றும் 100,000 இற்கும் மேற்பட்ட முட்டைகள் எனும் ஒவ்வொரு தொகுதியின் கீழ் முட்டைகளை உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தொகுதியின் கீழ் நாளொன்றில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முட்டை ஒன்றினை இறக்குமதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றினை நுகர்வோருக்கு வழங்கக் கூடிய விலை எவ்வளவு என்பதையும்;

(iii) முட்டை உள்ளிட்ட சில அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் ஏமாற்று வியாபாரிகளால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

831/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 746-இந்திரிலிகொட கிராம அலுவலர் பிரிவின், பாடசாலை வீதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்யும் அடிப்படைப் பணிகள் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் களுத்துறை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(ii) அதற்கமைய, முதற் கட்டமாக மேற்படி வீதியில் கொன்கிறீட் கற்கள் இடப்பட்டன என்பதையும்;

(iii) தற்போது மேற்படி கொன்கிறீட் கற்கள் மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதன் காரணமாக வீதி சேதமடைந்து போக்குவரத்துக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை யாது என்பதையும்;

(iv) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் காரணமாக நிதி விரயமாகி இருப்பின், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

835/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு முதல் இதுவரை கொழும்பு மாவட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ள அதிக ஆபத்துடனான வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு மத்தியில் மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுகூலங்கள் கிடைக்கப்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட அதிக ஆபத்துடனான வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு அனுகூலங்கள் வழங்கப்படுவதில் தாமதம் காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

847/2023

கௌரவ காமினி வலேபொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2021ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட இரசாயன பசளைக்கான தடை காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு கணக்கிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல், தேயிலை, இறப்பர், கறுவா, தென்னை மற்றும் காய்கறிகள் போன்ற ஒவ்வொரு பயிர் வகையினதும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தனித் தனியே யாதென்பதையும்;

(iii) இரசாயனப் பசளையை தடை செய்ததன் காரணமாக விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகி உள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

858/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019-2022 காலப்பகுதியில் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட, ஓட்டமாவடியிலுள்ள கொவிட்-19 காரணமாக இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட கொவிட்-19 காரணமாக இறந்த உடல்களின் மொத்த எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) மேலே சொல்லப்பட்ட இறந்த உடல்களின் எண்ணிக்கையை அவற்றின் வயது, பால், இனம், மதம் மற்றும் வதிவிட மாகாணம்/மாவட்டம் ஆகியவற்றுக்கு இணங்க வெவ்வேறாகவும்;

(iii) கொவிட்-19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் இடமாக அரசாங்கம் ஓட்டமாவடியைத் தெரிவுசெய்தமைக்கான அடிப்படையையும்;

(iv) ஓட்டமாவடியைப் போன்று அதே அடிப்படையையும் பிரமாணங்களையும் பயன்படுத்தி அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கொவிட்– 19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் இடமாக/ இடங்களாக ஓட்டமாவடி தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தை/ இடங்களைத் தெரிவு செய்வதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சிகளை மேற்கொண்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

866/2023

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிஹிந்தலை பிரதேச சபையால் புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடை அறைகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கடை அறைகளை பகிர்ந்தளிக்கையில் முறைகேடு இடம்பெற்றுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1300/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் இன்றளவில் மின்வெட்டு அமுலில் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மின்வெட்டு அமுலாகும் நேரங்கள் மற்றும் பிரதேசங்களைத் தீர்மானிக்கையில், தற்போது பின்பற்றப்படும் தொழில்நுட்ப வழிமுறை யாது என்பதையும்;

(iii) அந்த வழிமுறையை வகுக்கும்போது கருத்திற்கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1302/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு புகையிரத்தினதும் சேரிடம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) பொருட்களை ஏற்றிச் செல்வதன் பொருட்டு அதிகமாக புகையிரதங்களை ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1313/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரான்ஸ் அரசாங்கத்தின் கடனுதவித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கிழக்கு மாகாணத்தின் முந்தானையாறு ஆற்று வடிநில கருத்திட்டத்திற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் இரண்டு நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திற்கு கடனுதவி வழங்கும் தரப்பினர், அந்த நீர்த்தேக்கங்களில் களிமண் அணைகளை அமைப்பதற்கு வெளிநாட்டு ஆலோசகர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றனர் என்பதையும்;

(iii) ஆயினும், நிபுணத்துவ அறிவுடைய பொறியியலாளர்கள் இந்நாட்டில் உள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) வெளிநாட்டு ஆலோசகர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கடன் வழங்கும் தரப்பினரால் அழுத்தம் கொடுக்கப்பட்டதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கிழக்கு மாகாணத்தில், கல்லோயா நவோதய கருத்திட்டத்தின் அனைத்து நிதியும் செலவிடப்பட்டுள்ள போதிலும் இயந்திர வேலைகள் உட்பட சில வேலைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமையால் இக்கருத்திட்டத்தின் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லையென்பதை அறிவாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1318/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களனி கங்கையை அண்டியதாக அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அக்கைத்தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் கழிவுநீர், அந்த கங்கையுடன் கலப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அந்தக் கழிவுநீர் காரணமாக களனி கங்கையின் நீருக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) கழிவுநீரை களனி கங்கைக்கு வெளிவிடுவதைத் தடுக்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2023 மே 12, வெள்ளிக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 2/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 8/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2023

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2023

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2023

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2023

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2023

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2023

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2023

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2023

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2023

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2023

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2023

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட,— பயிர்களை சேதப்படுத்துகின்ற மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்,— இலங்கையில் விவசாயப் பயிர்களுக்கு வன விலங்குகளினால் பெரும் சேதங்கள் ஏற்படுவதாலும், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் அறிக்கைகளின் பிரகாரம் விலங்குகளால் ஏற்படுகின்ற பயிர்ச் சேதமானது வருடாந்தம் சுமார் 40% அதாவது, 1800 கோடி ரூபாய்களை விட அதிகமென்பதாலும், அதிலும் மந்திகளினால் விவசாயப் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்கள் படிப்படியாக அதிகரிக்கின்ற காரணத்தினால் எமது நாட்டின் விவசாயப் பெரு மக்களுக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் நேரடி தாக்கம் ஏற்படுவதாலும், இலங்கை பௌத்த மற்றும் அகிம்சை நெறி கலாசாரத்துடன்கூடியதொரு நாடு என்ற வகையில் மந்திகளைக் கொல்வதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்ப்பதை அனுமதிக்க முடியாது என்பதாலும், விஞ்ஞானபூர்வமான செயன்முறையொன்றின் மூலம் மந்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.